பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 12 2025 WEDNESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. அமெரிக்காவின் Blue Bird Block-2 செயற்கைக்கோள், LVM3-M6 ராக்கெட் மூலம் இன்று காலை ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
   **இஸ்ரோ விஞ்ஞானிகளின் இந்த சாதனையை குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் பாராட்டியுள்ளனர்.
2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்திற்காக மத்திய அரசு 95 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
3. பயணிகள் விமான சேவை தொடங்குவது தொடர்பாக பல்வேறு விமான நிறுவனங்களுடன் தாம் ஆலோசனை மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.
4. அமெரிக்க H-1B விசா நெறிமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது.
5. Solapur சர்வேதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

அமெரிக்காவின் Blue Bird Block-2 செயற்கைக்கோள், LVM3-M6 ராக்கெட் மூலம் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து இந்த அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக்கோள் காலை மணி 8.55-க்கு செலுத்தப்பட்டது.

இந்தியாவின் விண்வெளிப் பயணத்தில் இதுவொரு முக்கிய மைல்கல் என்று பிரதமர் **திரு. நரேந்திர மோடி** தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள அவர். மிக அதிக எடை கொண்ட செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கான தொழில்நுட்பம் இந்தியாவிடம் இருப்பதை இது நிரூபித்துள்ளதாக கூறினார்.

சுயசார்பு இந்தியாவுக்கு இதுவொரு எடுத்துக்காட்டாக இருப்பதாகவும், நமது விண்வெளி விஞ்ஞானிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*நமது இளம் விஞ்ஞானிகளின் ஆற்றல் மூலம் நாட்டின் விண்வெளித் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*குடியரசு துணைத்தலைவர் **திரு. சி.பி. ராதாகிருஷ்ணன்** விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக விளங்குவதாகவும், இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியாவின் ஆற்றல் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.*

*ஆறரை டன் எடை கொண்ட இந்த தகவல் தொடர்பு செயற்கைக் கோள், இந்தியாவிலிருந்து செலுத்தப்பட்ட மிக அதிக எடை கொண்ட செயற்கைக்கோள் என்று இஸ்ரோ தலைவர் **திரு. நாராயணன்** தெரிவித்துள்ளார்.*

*ஸ்ரீஹரிகோட்டாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், Gaganyaan போன்ற இந்தியாவின் விண்வெளித் திட்டங்களுக்கு இது உத்வேகம் அளிக்கும் என்று கூறினார்.*

*இந்தியா இதுவரை, 34 நாடுகளின் 434 செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளதாக திரு. நாராயணன் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, உத்தரபிரதேசம், லக்னோவில் நாளை, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயின் 101வது பிறந்த நாள் விழாவில், ராஷ்ட்ர Prerna Sthal நினைவு மண்டபத்தை திறந்து வைக்கிறார்.*

*லக்னோவில் 65 ஏக்கரில் 230 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட இந்த தேசிய நினைவு மண்டபத்தில், அடல் பிஹாரி வாஜ்பேய், டாக்டர் Syama Prasad Mookorjee, பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா உள்ளிட்டோரின் வெண்கலச் சிலைகள் இடம்பெற்றுள்ளன.*

*98 ஆயிரம் சதுரஅடியில் தாமரை வடிவத்தில் நவீன அருங்காட்சியகமும் இதில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இந்த அருங்காட்சியகத்தில் இந்தியாவின் வரலாறும், நாட்டிற்கு பங்களிப்பு அளித்த தலைவர்கள் குறித்த தகவல்களும் இடம்பெற்றுள்ளன.*

*>>>>><<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்திற்காக மத்திய அரசு 95 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் கிராமப்புற மக்களுக்கு வருடத்திற்கு 125 நாட்கள் இதன்மூலம் வேலை உறுதி செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.*

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 2 லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே செலவிட்டதாக அவர் குறை கூறியுள்ளார்.*

*ஆனால், திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இந்த திட்டத்திற்காக 8 லட்சத்து 53 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*பயணிகள் விமான சேவை தொடங்குவது தொடர்பாக பல்வேறு விமான நிறுவனங்களுடன் தாம் ஆலோசனை மேற்கொண்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், Shankh Air, Al Hind Air, Fly Express உள்ளிட்ட விமான நிறுவனங்களின் அதிகாரிகளுடன் தாம் ஆலோசனை மேற்கொண்டதாக கூறியுள்ளார்.*

*இந்தியாவில் பயணிகள் விமான சேவை நடத்த இந்த விமான நிறுவனங்களுக்கு, தமது அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*ஒடிசாவில் Dhanu யாத்திரை திறந்தவெளி நாடக விழா இன்று மாலை தொடங்குகிறது.*

*இந்த கலாச்சார திருவிழாவில் கிருஷ்ணர், கம்சன் தொடர்பான கதையின் அடிப்படையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.*

*இந்த கலைவிழாவில், Bargarh நகரம் மதுரா நகரம் போல் வடிவமைக்கப்பட்டு, அனைத்து மக்களும் பங்கேற்று விழாவை கொண்டாடவுள்ளனர்.*

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், இந்த கலாச்சார விழா வெற்றிகரமாக நடைபெற வாழ்த்துகளை தெரிவிப்பதாக திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

>>>>><<<<<

வடமாநிலங்களில் பனிப்பொழிவு அதிகரித்துள்ள நிலையில், தில்லி உள்ளிட்ட நகரங்களில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுச் சூழல் பாதிப்பினால் புகைமூட்டம் காணப்படுவதால் மக்கள் அவதிப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுற்றுச்சூழல் பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில், தில்லியிலிருந்து 300 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள 6 அனல் மின் நிலையங்களுக்கு தில்லி சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டின் பேரில், இந்த அனல் மின் நிலையங்கள் 61 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் அந்த ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

அமெரிக்கா H-1B விசா நெறிமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போதைய நடைமுறைக்கு மாற்றாக, அதிக திறன் மற்றும் பயிற்சிபெற்ற வெளிநாட்டினருக்கு இந்த H-1B விசா வழங்க இந்த புதிய நெறிமுறைகள் வழிவகை செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் ஊதியத்தை உறுதி செய்யவும், பணியிடங்களில் வசதிகளை மேம்படுத்தவும் அமெரிக்காவைச் சேர்ந்த பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு அளிக்கவும் இந்த புதிய நெறிமுறைகள் உதவுகிறது.

>>>>><<<<<

அமெரிக்கா - வெனிசுலா இடையேயான பிரச்சினைக்க தீர்வு காண, ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசரகால கூட்டத்தை நடத்த வேண்டும் என்று பல்வேறு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

*வெனிசுலாவிலிருந்து சென்ற இரண்டு எண்ணெய் கப்பல்களை அமெரிக்கா பிடித்து வைத்ததை அடுத்து, இருநாடுகளுக்கும் இடையேயான பிரச்சினை மேலும் தீவிரமடைந்துள்ளது.*

*வெனிசுலாவில் Nicolas Maduro தலைமையிலான அரசை அமெரிக்கா ஏற்க மறுத்துள்ளதாக ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் Michael Waltz தெரிவித்துள்ளார்.*

*போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு வெனிசுலா அரசு ஆதரவளிப்பதாக கூறி, அமெரிக்கா அந்நாட்டிற்கு பொருளாதார தடை விதித்திருந்தது.*

*இதனிடையே, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளதோடு, வெனிசுலாவிற்கு முழுஆதரவும் தெரிவித்துள்ளன.*

*>>>>><<<<<*

*பங்களாதேஷில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அவாமி லீக் கட்சிக்கு தடை விதித்துள்ளதற்கு, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.*

*நேர்மையாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடத்தி, ஜனநாயக முறையில் அரசை தேர்ந்தெடுக்க, மக்களுக்கு உரிமை உள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.*

*அமெரிக்காவின் Gregory Meeks, Huizunga, Julie Jhonson உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு.முகமது யூனுஸ்-க்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனை தெரிவித்துள்ளனர்.*

*>>>>><<<<<*

*Solapur சர்வேதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 6-1 என்ற செட்கணக்கில் Soha Sadiq-ஐ வென்றார்.*

*இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் வைஷ்ணவி அட்கரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

விஜய் அஸாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியின், புதுச்சேரி அணிக்கு எதிரான ஆட்டத்தில் தமிழக அணி முதலில் பேட் செய்து வருகிறது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற புதுச்சேரி அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

>>>>> <<<<<